மெட்ரோ ரயில் நிர்வாக அலுவலகத்துக்காக

# நந்தனத்தில் ரூ.150 கோடியில் 'மெட்ரோ பவன்' கட்டுமானம்

## • 2 ஆண்டுகளில் பணிகள் முடிக்கப்படும்

■ சென்னை

சென்னை நந்தனத்தில் கட்டப்பட்டு வரும் மெட்ரோ ரயில் இயக்கம், நிர்வாக அலுவலகம் உள்ளிட்ட வசதிகளுடன் கூடிய 'மெட்ரோ பவன்', 2 ஆண்டுகளில் கட்டி முடிக்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சென்னையில் இரு வழித்தடங்களில் தற்போது 45 கி.மீ தூரத்துக்கு மெட்ரோ ரயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன. விமான நிலையம் - வண்ணாரப்பேட்டை, பரங்கிமலை - சென்ட்ரல் வரையில் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படுகின்றன. விரைவாகச் செல்வதோடு முற்றிலும் ஏ.சி. வசதி செய்யப்பட்டிருப்பதால், மெட்ரோ ரயில்களில் பயணிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இதற்கிடையே, 2 கட்ட மெட்ரோ ரயில் திட்டப்பணிகளில் நிர்வாகம் கவனம் செலுத்தி வருகிறது. இத்திட்டத்துக்கான நிலம் கையகப்படுத்தும் பணிகள் நிறைவடைந்துள்ளன.

திட்டப்பணிகளுக்கான டெண்டர் வெளியிடும் பணிகள் தற்போது நடந்து கொண்டிருக்கின்றன. மெட்ரோ ரயில்கள் இயக்கத்தின் மையமாக இருக்கும் நந்தனத்தில் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் நிர்வாகம் மற்றும் இயக்க அலுவலகமாக 'மெட்ரோ பவன்' அமைக்கும் பணிகள் கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்டு பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

இதுதொடர்பாக மெட்ரோ ரயில் நிறுவனத்தின் அதிகாரிகளிடம் கேட்டபோது, "ஏற்கெனவே திட்டமிட்டபடி மெட்ரோ ரயில் சேவை இயக்கத்தின் மையப் பகுதியான நந்தனத்தில் சேமியர்ஸ் சாலை அருகே ரூ.150 கோடி செலவில் 'மெட்ரோ பவன்' அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மொத்தம் 10 ஏக்கரில் அமையும் 'மெட்ரோ பவன்' மெட்ரோ ரயில் இயக்கம் மற்றும் நிர்வாக அலுவலகமாக இருக்கும். இதுதவிர, மெட்ரோ ரயில் அதிகாரிகள் மற்றும் அலுவலர்களுக்கான குடியிருப்புகள் அமைக்கப்படுகிறது.

தற்போதைய நிலவரப்படி, 30 சதவீத பணிகள் நிறைவடைந்துள்ளன. மீதமுள்ள பணிகளை அடுத்த 2 ஆண்டுகளில் முடிக்க திட்டமிட்டுள்ளோம்" என்றனர்.